ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.7 – செஞ்சொற்கவிகாள்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.7 – செஞ்சொற்கவிகாள்

‡ செஞ்சொல் கவிகாள் ! உயிர் காத்தாட்செய்ம்மின் ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
வஞ்சக் கள்வன் மா மாயன் ⋆
மாயக் கவியாய் வந்து ⋆
என் நெஞ்சும் உயிரும் உள் கலந்து ⋆
நின்றார் அறியா வண்ணம் ⋆
என் நெஞ்சும் உயிரும் அவை உண்டு ⋆
தானே ஆகி நிறைந்தானே ‖ **10.7.1** ‖

தானே ஆகி நிறைந்து ⋆
எல்லா உலகும் உயிரும் தானே ஆய் ⋆
தானே யான் என்பான் ஆகித் ⋆
தன்னைத் தானே துதித்து ⋆
எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
கோனே ஆகி நின்றொழிந்தான் ⋆
என்னை முற்றும் உயிர் உண்டே ‖ **10.7.2** ‖

என்னை முற்றும் உயிர் உண்டு ⋆
என் மாய ஆக்கை இதனுள் புக்கு ⋆
என்னை முற்றும் தானே ஆய் ⋆
நின்ற மாய அம்மான் சேர் ⋆
தென்னன் திருமாலிருஞ்சோலைத் ⋆

திசை கை கூப்பிச் சேர்ந்த யான் ⋆
இன்னும் போவேனே கொலோ ! ⋆
என் கொல் அம்மான் திரு அருளே ॥ **10.7.3** ॥

என் கொல் அம்மான் திரு அருள்கள் ⋆
உலகும் உயிரும் தானே ஆய் ⋆
நன்கென் உடலம் கை விடான் ⋆
ஞாலத்தூடே நடந்துழக்கி ⋆
தென் கொள் திசைக்குத் திலதமாய் நின்ற ⋆
திருமாலிருஞ்சோலை ⋆
நங்கள் குன்றம் கை விடான் ⋆
நண்ணா அசுரர் நலியவே ॥ **10.7.4** ॥

நண்ணா அசுரர் நலிவெய்த ⋆
நல்ல அமரர் பொலிவெய்த ⋆
எண்ணாதனகள் எண்ணும் ⋆
நன் முனிவர் இன்பம் தலை சிறப்ப ⋆
பண் ஆர் பாடல் இன் கவிகள் ⋆
யானாய்த் தன்னைத் தான் பாடி ⋆
தென்னா என்னும் என் அம்மான் ⋆
திருமாலிருஞ்சோலையானே ॥ **10.7.5** ॥

திருமாலிருஞ்சோலையானே ஆகிச் ⋆
செழு மூ உலகும் ⋆
தன் ஒருமா வயிற்றின் உள்ளே வைத்து ⋆
ஊழி ஊழி தலை அளிக்கும் ⋆
திருமால் என்னை ஆளுமால் ⋆
சிவனும் பிரமனும் காணாது ⋆

அருமால் எய்தி அடி பரவ ⋆
அருளை ஈந்த அம்மானே ॥ **10.7.6** ॥

அருளை ஈ என் அம்மானே ! என்னும் ⋆
முக்கண் அம்மானும் ⋆
தெருள் கொள் பிரமன் அம்மானும் ⋆
தேவர் கோனும் தேவரும் ⋆
இருள்கள் கடியும் முனிவரும் ⋆
ஏத்தும் அம்மான் திருமலை ⋆
மருள்கள் கடியும் மணி மலை ⋆
திருமாலிருஞ்சோலை மலையே ॥ **10.7.7** ॥

‡ திருமாலிருஞ்சோலை மலையே ⋆
திருப்பாற்கடலே என் தலையே ⋆
திருமால் வைகுந்தமே ⋆
தண் திருவேங்கடமே எனதுடலே ⋆
அரு மா மாயத்தெனதுயிரே ⋆
மனமே வாக்கே கருமமே ⋆
ஒரு மா நொடியும் பிரியான் ⋆
என் ஊழி முதல்வன் ஒருவனே ॥ **10.7.8** ॥

ஊழி முதல்வன் ஒருவனே என்னும் ⋆
ஒருவன் உலகெல்லாம் ⋆
ஊழி தோறும் தன் உள்ளே படைத்து ⋆
காத்துக் கெடுத்துழலும் ⋆
ஆழி வண்ணன் என் அம்மான் ⋆
அம் தண் திருமாலிருஞ்சோலை ⋆

வாழி மனமே கை விடேல் ⋆
உடலும் உயிரும் மங்க ஒட்டே ॥ **10.7.9** ॥

மங்க ஒட்டுன் மா மாயை ⋆
திருமாலிருஞ்சோலை மேய ⋆
நங்கள் கோனே ! யானே நீ ஆகி ⋆
என்னை அளித்தானே ⋆
பொங்கைம் புலனும் பொறி ஐந்தும் ⋆
கருமேந்திரியம் ஐம்பூதம் ⋆
இங்கிவ் உயிர் ஏய் பிரகிருதி ⋆
மான் ஆங்கார மனங்களே ॥ **10.7.10** ॥

‡ மான் ஆங்கார மனம் கெட ⋆
ஐவர் வன் கையர் மங்க ⋆
தான் ஆங்காரம் ஆய்ப் புக்குத் ⋆
தானே தானே ஆனானைத் ⋆
தேன் ஆங்காரப் பொழில் குருகூர் ⋆
சடகோபன் சொல் ஆயிரத்துள் ⋆
மான் ஆங்காரத்திவை பத்தும் ⋆
திருமாலிருஞ்சோலை மலைக்கே ॥ **10.7.11** ॥

அடிவரவு — செஞ்சொல் தானேயாகி என்னை என்கொல் நண்ணா திருமாலிருஞ்சோலை அருளை திருமாலிருஞ்சோலை ஊழி மங்கவொட்டு மானா திருமாலிருஞ்சோலை

செஞ்சொற்கவிகாள் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்